**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.57 /2023**

**Deposition of P.W.9**

Name : திரு. ஹரிகிருஷ்ணன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:25.02.2026

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது திருப்பூர் மாநகரம் போக்குவரத்து புலனாய்வு பிரிவில் காவல்ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் 08.08.2014ம் தேதி தக்கலை வட்ட காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது அன்றைய தினம் தக்கலை காவல் உதவி ஆய்வாளர்திரு. பரத்லிங்கம் பதிவு செய்த தக்கலை காவல்நிலைய குற்ற எண். 613/2014 பிரிவுகள் 341, 294(பி), 307, 387, 506(2), 427 இ.த.ச மற்றும் பிரிவு 3 (1) தமிழ்நாடு பொதுசொத்துக்களை சேதப்படுத்துவதை தடை செய்யும் சட்டபடியான வழக்கை 08.08.2014ம் தேதி 15.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுஜின், பிபின்ராஜ் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6.

பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் 16.30 மணிக்கு உடைந்து சேதமடைந்த இருசக்கர வாகனத்தின் பம்பர் ஒன்றை அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.7. சாட்சிகள் விஜின், சேகர், பேபி, செல்வன், தங்கையன், சுஜின், பிபின்ராஜ் ஆகியவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 09.09.2014ம் தேதி காலை 11.00 மணிக்கு பள்ளியாடி பழையக்கடையில் வைத்து எதிரியை கைது செய்து சாட்சிகள் தேவஊவு, கனகராஜ் ஆகியவர்களை விசாரித்தேன். எதிரி தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அந்த ஒப்புதல்வாக்குமூலத்தில் வாதியிடம் அளித்த ரூ.200/—ஐ அவரிடமிருந்து ஒப்படைப்பதாக தெரிவித்தார். அவரிடமிருந்து முறுக்கு கம்பி ஒன்றை கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.8. முறுக்கு கம்பி சா.பொ.1. அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 11.00 மணிக்கு எதிரி எடுத்து ஆஜர் செய்த இரண்டு ரூ.100/— நோட்டுகளை அத்தாட்சி மூலம் தயார் செய்து கைப்பற்றினேன். பின்னர் ஆஜர் எதிரிகளையும், கைப்பற்றப்பட்ட சொத்துக்களையும் நீதிமன்றம் முன்பு ஆஜர்படுத்த வேண்டுகோள் மூலம் உரிய வழிகாவல் மூலம் அனுப்பி வைத்தேன். பின்னர் சாட்சிகள் தேவஊவு, கனகராஜ் ஆகியவர்களை 14.01.2015ம் தேதி விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகளை விசாரித்ததிலிருந்தும், என்னுடைய விசாரணையின் மீதும் எதிரியின் மீதான குற்றம் உண்மை என்று தெரிய வந்ததால் ஆஜர் எதிரி மீது 14.01.2015ம் தேதி 341, 294(பி), 427, 307, 387, 506(2) இ.த.ச படி இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

பொய்யான புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.